# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

ஜனவரி – 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550




visit us: www.pallavipathippakam.in | DOAJ DIRECTORY OF OPEN ACCESS JOURNALS Google scholar

முனைவர் சி. சத்யா


# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1



**கௌரவ ஆசிரியர்**
முனைவர் சொ. சுப்பையா
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.


**இணை ஆசிரியர்**
முனைவர் க. இரமேஷ்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**சிறப்பாசிரியர்**
முனைவர் அ. அறிவுநம்பி
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**துணை ஆசிரியர்**
முனைவர் போ. சத்தியமூர்த்தி
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**ஆசிரியர்**
முனைவர் சி. தியாகராசன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**பதிப்பாசிரியர்**
நல். நடராசன்
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.





**0424**
**4562211,2263197**
**94422 51549**
**96291 82383**

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**

## பல்லவி பதிப்பகம்

194,கண்ணா காம்ளக்ஸ் , இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு-638011.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1.சோழ நாட்டின் மருமகள் காவேரி - | முனைவர்.க.ஆனந்தி | 5 |
| 2.இயேசு காவியத்தில் உவமைகள் - | முனைவர்.தா.க.அனுராதா | 8 |
| 3.குழந்தைப் பாடல்களில் கல்வி - | சு.அய்யனார் | 11 |
| 4.குறுந்தொகை வழிபாடு - | அ.ஜெனார்த்தலிபேகம் | 14 |
| 5.அறமும் புறமும் காட்டும் கல்வி - | சு.கௌரி | 17 |
| 6.தமிழ்மொழி வளர்ச்சியில் தெளிதமிழ் திங்களிதழ் - | க.கண்ணன் | 22 |
| 7.வழிபாட்டில் பண்பாடு - | பேரா.முனைவர்.மு.குருவம்மாள் | 25 |
| 8.கடல்சார் மக்கள் வாழ்வு ஆறுகாட்டுத்துறை புதினத்தை முன்வைத்து - | முனைவர்.வீ.மீனாட்சி | 26 |
| 9.பக்தியில் ஆண்டாளும் மீராவும் - | முனைவர்.க.மீரா | 29 |
| 10.தாலாட்டுப் பாடல்கள்-சிறப்பு - | முனைவர்.க.முத்தழகி | 32 |
| 11.வணிக நாவல்களில் பாத்திரபடைப்பு - | பே.பிரதிபா | 35 |
| 12.பிரபஞ்ச வைராக்கியம் - | முனைவர்.ப.பிரியா | 38 |
| 13.இரந்தார்க்கு இன்முகம் - | முனைவர்.மு.புஷ்பாரெஜினா | 40 |
| 14.ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம் - | து.புஷ்பவள்ளி | 43 |
| 15.சங்க அக இலக்கியங்களில் முல்லை வருணனை - | ச.ராஜேஸ் | 46 |
| 16.பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும் - | முனைவர்.சு.சத்தியா | 50 |
| 17.பண்டைய இலக்கியத்தில் விழாக்கள் - | முனைவர்.பி.சேதுராமன் | 56 |
| 18.இரட்டைக் காப்பியங்களில் பெண்களின் சிறப்புக்களும் பாவேந்தரின் ஒத்தக்கருத்து - | மா.விஜயலெட்சுமி | 60 |
| 19.இல்வாழ்வின் மேன்மை; திருக்குறளும் இன்னிலையும் - | முனைவர்.மு.வையபுரி | 63 |
| 20.தொடக்க நிலையில் தமிழ்பாடம் கற்பித்தல் திறன் - | முனைவர் மெ.வனிதா | 66 |
| 23.தமிழில் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் - | எம்.எம்.ஜெயசீலன் | 78 |
| 21.சங்க இலக்கியத்தாவரங்களின் மருத்துவப் பயன்கள் (பிரண்டை, பீரம்) - | பா.ஆரோக்கியதாஸ் | 71 |
| 22.குறுந்தொகையில் மலர்கள் - | தா.பத்மா | 74 |
| 24.உலக அரங்கில் எதிர்ப்புக் கவிதை வரலாறு - | திரு.செல்லத்துரைசுதர்சன் முனைவர்.போ.சத்தியமூர்த்தி | 84 |

# இரந்தார்க்கு இன்முகம்

**முனைவர் மு.புஷ்பரெஜினா,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

**ஈதல்**

ஈ என்றால் தா என்று பொருள். வறியவர்க்கு ஒன்று ஈவது அறமாகும் இதனையே ஈகை என்றும், கொடை என்றும் கூறுவர். புரவலர்கள் ஈகை உள்ளம் படைத்தவர்களாகத் திகழ்ந்தனர். இல்லாதவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பது தான் கொடையாகும். மற்றவர்களுக்குக் கொடுக்கும் கொடையெல்லாம் பயனை எதிர்பார்த்து செய்யும் தன்மையை ஒத்ததாகும். இதனை வள்ளுவர்,

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**

**குறியெதிர்ப்பை நீர துடைத்து"**
(குறள் - 221)

என்கிறார்.

**ஈவதன் தேவை**

மற்றவரிடமிருந்து பொருளைப் பெறுதல் நல்லது என்றாலும் பிறரிடம் பொருள் வேண்டி இரத்தல் என்பது தீமை தருவதாகும். அவ்வாறு பிறருக்குக் கொடுப்பவர்க்கு மேலுலகம் அடையும் நிலை கிடைப்பது இல்லை என்றாலும் ஈவதே இன்றியமையாததாகும்.

**"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**

**இல்லெனினும் ஈதலே நன்று"** (குறள் - 222)

என்ற வள்ளுவர் கருத்திற்கிணங்க ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்கிறது விவிலியம்.

பசி என்னும் கொடிய நோய் மிக்க துன்பம் தருவதாகும். அத்தகைய வறியவரின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் உடையவனுக்கு அதைச் சேமித்து வைப்பதற்குரிய இடமாகும் என்பதையே,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி"** (குறள் - 226)

என்கிறது திருக்குறள்.

பகிர்ந்து உண்ணலை பறவைகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பர். அதேபோல் பகிர்ந்து உண்ணாது தான் தேடி நிரப்பிய உணவைத் தாமே தனியாக இருந்து உண்ணுதல் இரத்தலை விடத் துன்பம் தருவதாகும்.

"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய

தாமே தமியர் உணல்"
(குறள் - 229)

என்ற குறள்வழி வள்ளுவர் தனித்து உண்ணலால் ஏற்படும் துன்பத்தை உரைக்கின்றார்.

மேலும் அவ்வாறு பிறருக்கு கொடுக்கும் போதும் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்றெண்ணுகையில், வறியவர்க்குக் கொடுத்தல் வேண்டும் என்றும், அதனால் புகழ் உண்டாகும்படி வாழ்தல் வேண்டும் என்றும் அப்புகழைத் தவிர மனித உயிர்க்கு வேறொரு பயன் இல்லை என்றும்,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"
(குறள் - 231)

என்ற குறளில் வள்ளுவர் கூறுகிறார்.

திருக்குறளில் மட்டுமல்லாது நாலடியாரில் இத்தகைய ஈகைப்பண்பை பற்றி குறிப்பிடுகையில் உங்களுக்கு எதிரிலேயே மரணம் நிகழும் நாளும், வெறுக்கத்தக்க கிழப்பருவமும் உள்ளன. இவையல்லாமல் உங்கள் பெருமையைக் குலைக்கின்ற பிணிகள் உள்ளன. ஆதலால் கையில் பொருள் உண்டாகியிருக்கிற காலத்தில் (யாம் செல்வமுடையோம் என்று கர்வத்துடன்) வீணாகச் சொல்லிக் கொள்ளாதீர்கள். (அச்செல்வத்தின் மீது) பற்றுக் கொள்ளாதீர்கள். பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள். எச்செல்வத்தையும் மறைத்து வைக்காதீர்கள் என்ற கருத்து விளங்க,

"முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள

------------------------------------------

கரவண்மின் கைத்துண்டாம் போழ்து"
(நாலடி. 92)

என்ற பாடல் உணர்த்துகிறது.

இவ்வுலகத்தில் உள்ள வறுமையில் வாடும் வறியவர்களின் நிலையைப் பற்றி விளக்குகையில், சமுத்திரத்தால் சூழப்பட்ட இந்த உலகத்தில் அன்றாடப் பசியைத் தீர்க்கக் கூட முடியாதவர்களாய்ச் சமைக்கப்படாத அடுப்பினையுடைய வறியவர்களை முற்பிறவியில் பிறருக்கு ஈயாத கருமிகள் என்று (அறிவுடையோர்) கூறுவர். ஆதலால் உங்கள் வீட்டில் இருக்கக் கூடியவற்றில் இம்மியளவு அரிசியையாவது நித்தமும் பிறருக்குக் கொடுத்து விட்டு உண்பீர்களாக! என்று ஈதலின் இன்றியமையாமையை,

"இம்மி அரிசித் துணையானும் வைகலும்

------------------------------------------

அடாஅ அடுப்பி னவர்"
(நாலடி. 94)

என்பதோடு மறுபிறவிக்குரிய புண்ணியமும் இப்பிறவியில் புகழும் கிட்டுவதால் இரண்டினையும் பெறும் பொருட்டாவது ஒருவன் ஈதல் வேண்டும் என்பது கருத்து.

மறுபிறவியையும் இப்பிறவியையும் கருத்தில் கொண்டு தன்னால் கொடுக்க இயன்ற பொருள்களை ஒருவருக்குத் தகுந்தபடி தானமளிக்க வேண்டும். அப்படி ஈவது தரித்திர நிலைமையால் முடியவில்லையென்றாலும், தாம் பிறரிடம் ஒரு பொருளை யாசிக்காதிருப்பது அந்த ஈகையை விட இரண்டு மடங்கு மேன்மையானதாகும்.

"மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு

------------------------------------------

ஈதல் இரட்டி யுறும்"
(நாலடி 95)

என்ற பாடல்வழி பிறருக்கு தானமளிக்க இயலாவிடினும் பிறரிடம் இரந்து நிற்காதிருத்தல் மேன்மைத்தரும் என்றறிய முடிகிறது. மேலும் தம் கொடைப்பண்பால் பலராலும் விரும்பப்பட்டு வாழ்பவர்கள், ஊரின் மத்திய பாகத்தில் மேடையானது சுற்றியமையப் பெற்ற பயனளிக்கும் பெண்பனை மரத்துக்கு இணையாவர்கள் என்றும் நாலடியார் உரைக்கின்றது.

மழை பொழிவது உலகத்திற்கு இன்றியமையாதது போல, உயர்ந்தோர் அறங்கள் செய்வதும், இன்றியமையாதது ஆகும். பெய்ய வேண்டிய காலத்தில் மழை பெய்யாவிட்டாலும், உயர்ந்தோர் தாம் செய்ய வேண்டிய அறங்களைச் செய்யாமல் விட்டு விட்டாலும் இந்த உலகத்தினர் உய்வு பெறும் வழி என்னவோ? என ஐயுறுவதாகக் கூறப்படுகிறது.

**ஈயாதாரின் நிலை**

தமது செல்வத்தைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து போகின்ற கொடியவர், வறியவர்க்குக் கொடுத்து அவர்கள் மகிழ்வதால் உண்டாகும் இன்பத்தை அறிய மாட்டார்கள்.

**"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர்"** (குறள்: 228)

என்பதோடு அவ்வாறு ஈயும்போது, உன வலதுகை செய்யும் நன்மையை உன் இடதுகைக்கு தெரியாமல் செய்வாயாக என்கிறது விவிலியம்.

பிறருக்கு ஈந்து, தானும் அனுபவித்தாலும் செல்வமானது அதனதன் காலத்தில் சேரும். அப்படிச் செல்வம் சேருவதற்குரிய வினைப் பயன் முடிவடைந்து விட்டால் வல்லமையுடன் பற்றிக் கொண்டாலும் செல்வம் நிலைத்து நில்லாமல் அவனைத் தனியாக விட்டு விடும். இவ்வுண்மையை உணராதவர்களே துன்பமுற்றுத் தம்மை

வந்தடைந்தவர்களின் வறுமைத் துன்பத்தைப் போக்காதவர்களாயிருக்கிறார்கள் என்பதைப் பின்வரும் பாடல் வழி அறியலாம்.

"நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்

------------------------------------------------

விடுக்கம் வினைஉலந்தக் கால்"
(நாலடி 93)

தம் குடியானது செல்வ வளத்தால் மிகவும் மேம்பட்ட போதிலும் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணாத மானுடர், இடுகாட்டுக்குள் நிற்கும் ஆண்பனையைப் போல் யாருக்கும் பயனற்றவர்களாவர்.

ஆறுகளால் நீர்வளம் மிகுகின்ற கடலினது குளிர்ந்த கரையையுடையவனே! யாசித்து ஏந்தியமையை மறுத்துப் புறம் தள்ளாமல் ஏதாவதேனும் தம் அளவுக்கு உட்பட்டு வறியவர்க்கு ஈவதே ஆண்களின் கடமையாகும். இப்படி ஏழைகளுக்கு ஈயாமல் திருப்பிக் கொடுக்கக் கூடியவர்களுக்கு கொடுப்பது சிறந்த கடன் என்னும் பெயரையுடையதாம். அதனை ஈகை என்னும் கடமையாகக் கூறுதல் சரியன்று.

"ஏற்றகை மாற்றாமை என்னானும் தம்வரையான்

------------------------------------------------

பொலிகடன் என்னும் பெயர்த்து"
(நாலடி 98)

கொடுத்ததைத் திருப்பிக் கொடுக்கக்கூடியவர்களுக்குக் கொடுப்பது ஈகை என்று கருத இயலாது, கடன் என்றே கூறத்தகும் என்கிறது.

**ஈகையின் பயன்**

தவத்தால் வலியார்க்கு தமக்கு நேரும் பசியைப் பொறுககும் வல்லமை ஏற்படுகிறது. இவ்வலிமை, பொறுத்தற்கரிய பசியைக் கொடையால் தீர்ப்பவரின் வலிமையை விடத் தாழ்ந்தது ஆகும்.

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின்" குறள். 225)

பகுத்து உண்டு பழகியவனைப் பசி என்னும் பொல்லாத நோய் சேர்தல் இல்லை(குறள். 227) என்றும், உலகத்தவர் சிறப்பாகப் பேசுவதெல்லாம் இரப்பவர்க்கு ஒன்றைக் கொடுப்பவர்க்கு உண்டாகும் புகழையேயாகும் (குறள் 232) என்றும் வள்ளுவர் கூறக் காணலாம். மேலும் தம்மிடத்துப் பொருள் இல்லாத காலத்திலும் செல்வமுள்ள காலத்தைப் போல மிகவும் மகிழ்ச்சியுடன் தம்மால் முடிந்த அளவிற்கு அடக்கத்தோடு கொடுக்கும் குணம் எனும் நற்குணமுடைய மனிதருக்கு, அவ்வுலகமாகிய முக்தியுலகின் கதவுகள் மூடப்பட்டிருப்பதில்லை.(நாலடி. 91) என்றும்,

உன்னிடமுள்ள செல்வத்தின் அளவை மிகவும் சிறிது என்று கூறாமலும், உன்னிடம் வந்து யாசிப்பவர்களுக்கு இல்லையென்று கூறாமலும் என்றென்றைக்கும் தருமமாகிய பயனை எல்லோரிடத்தும் செய்வாயாக. நீ அவ்வாறு பலரிடத்தும் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்யும் அறவினையானது வரிசையாக வாசல்கள் தோறும் யாசிக்கும் தபோதனரின் திருவோடு நிறைவது போல் உன் புண்ணியத்தை மெல்ல முழுமையாக்கி விடும். (நாலடி. 99) என்றும்,

குறுந்தடியில் அடிக்கப்படும் இடத்தையுடைய பேரிகையின் ஒலியை ஒரு காதத் தொலைவில் உள்ளவர்கள் வரை கேட்பார்கள். இடி இடித்து முழங்கிய முழக்கத்தை ஒரு யோசனைத் தூரமுள்ளவர்கள் வரை கேட்பார்கள். ஆனால் உயர்ந்தோர்களால் 'இவர் கொடுத்தார்' என்று புகழ்ந்து கூறப்படும் சொல்லோ மேலும் கீழுமாக அடுக்கப்பட்டிருக்கிற மூன்று உலகங்களுக்கும் கேட்கும். பிறருக்குக் கொடுப்போரைச் சான்றோர் புகழ்வர். சான்றோர் புகழ்வதால் அவர்களுடைய புகழ் மேலும் மேலும் பெருகும் என்பது கருத்து. (நாலடி. 100) என்றெல்லாம் நாலடியார் பல்வேறு கருத்துக்களை வழங்கக் காணலாம்.

**இன்றைய நிலையில் ஈகை**

இரந்து வந்தவர்க்கு இல்லை என்னும் துன்பம் தரும் வார்த்தையைச் சொல்லாமல், கொடுத்தல் உயர்குடிப் பிறந்தவரிடத்தில் உள்ளது.**(குறள். 223).** என்றும், இரப்பவர் வாழ விரும்பிய பொருளைப் பெற்று மகிழ்வதைக் காணும் வரையில் இரப்பதைப் போலவே, இரப்பதைக் கேட்பதும் கொடுப்பவர்க்குத் துன்பமாகத் தான் இருக்கும் **(குறள். 224)** என்றும் கூறுவதோடு, சாவதைப் போலத் துன்பம் தருவது வேறொன்றில்லை. வறியவர்க்கு ஒன்று கொடுக்க முடியாத இடத்தில் சாவதும் இனியதாகும் என்பதை,

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்

ஈதல் இயையாக் கடை"
(குறள். 230)

என்ற குறள் வழி வள்ளுவரும் நாலடியாரும் விவிலியமும் கூறியுள்ளதைப் போல தற்போது தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஏற்பட்ட அதிகபட்ச மழையின் பாதிப்பால் துன்பப்பட்ட மக்களுக்கு நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் பல்வேறு உதவிகள் கேட்காமலே வழங்கும் நற்பண்பினை, மனிதநேய கொடைத்தன்மையை, ஈகை வள்ளல்களைக் காண முடிந்தது இங்கு கண்ணோக்கத்தக்கது.

ISSN : 2278-7550
2278-7550

பல்லவி பதிப்பகம்